★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரீஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டுச் சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீனசந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 20 வெள்ளிக்கிழமை (05 · 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 290

# பலாலியில் வீரகாவியம் படைத்த கரும்புலிகளுக்கு இன்று தொடக்கம் 3 நாட்களுக்கு வீரவணக்க விழா

யாழ்ப்பாணம், ஓக. 5
பலாலி கூட்டுப்படைத் தளத்திற்குள் ஊடுருவி, வெற்றிகரத் தாக்குதல் நடத்தி வீரகாவியம் படைத்த ஆறு கரும்புலி மாவீரர்களுக்கும், இரண்டு புலி மாவீரர்களுக்கும் —

இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு வீரவணக்கம் செலுத்தி, அவர்கள் நினைவு கூரப்பட்டு —

எழுச்சியுடன் வெற்றிவிழா கொண்டாடப்படும்.

இம் மூன்று நாட்களிலும் சாதனை படைத்த அந்த மாவீரர்களுக்கு எழுச்சிபூர்வமாக வீரவணக்கம் செலுத்துமாறு மாவீரர் பணிமனையினர் மக்களிடம் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாவீரர் பணிமனை, மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

கடந்த இரண்டாம் திகதியன்று ஸ்ரீலங்காவின் இராணுவத் தளங்களில் மிகப் பெரிய பலம்பொருந்திய பலாலி இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணு இன்று வடக்கு நோக்கி புறப்படும்?

யாழ்ப்பாணம், ஓக. 5
கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த "றுகுணு" கப்பல் இன்று வடக்கு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் உரம் ஏற்ற வேண்டியிருந்ததாகவும் — ஆனால் தற்போது ஏற்றப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடெங்கும் புதனன்று இரவு கடல், வான், தரை தாக்குதல்கள்

## பொதுமக்கள் ஐவர் பலி!

யாழ்ப்பாணம் ஓகஸ்ட் 5

குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புகள் மீது புதன்கிழமை இரவு படையினர் நடத்திய கண் மூடித்தனமான விமான, ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் ஐந்து அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர், பத்துக்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். 15 க்கு மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன. பயன்தரும் மரங்கள் முறிந்து நாசமாகின. ஆழ்ந்த நித்திரையில் இருந்த மக்களை இந்த எதிர்பாராத தாக்குதல்கள் கிலி கொள்ள வைத்தன. பலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இரவோடிரவாக இடம் பெயர்ந்தனர்.

மல்லாகம் பகுதியில் புக்காரா விமானம் நடத்திய தாக்குதலில் மூவரும் —

அச்சுவேலியில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவரும் கொல்லப்பட்டனர், வல்வைப் பகுதியில் பீரங்கித் தாக்குதலில் ஒருவர் காயம் அடைந்தார்.

## புக்காரா குண்டு வீச்சினால் மல்லாகத்தில் மூன்று பேர் பலி

அளவெட்டி, ஓக. 5
வலிகாமம் வடக்குப் பகுதியின் மல்லாகத்தில் நேற்று அதிகாலை 3 20 மணியளவில் ஸ்ரீலங்கா வான்படையின் "புக்காரா" விமானம் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான திடீர் தாக்குதலில் இரு பெண்கள் உட்பட மூவர் மரணமானார்கள். 11 பேர் காயமடைந்தனர். 15 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. பயன்தரு மரங்கள் நாசமாகின. கால் நடைகள் இறந்தன.

மல்லாகம் சோடாக் கம்பெனி கிழக்கு ஒழுங்கை, மல்லாகம் சந்தி, நீதிமன்ற வீதி, குளமன்கால், சுன்னாகம் சந்தை ரோட்டைப் பகுதி ஆகியவற்றிலேயே புக்காரா குண்டுத் தாக்குதல்களை நடத்தியது.

மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் நடத்தப்பட்ட இக்குண்டுத் தாக்குதல்களினால் மல்லாகம் சுன்னாகம் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

முதலில் சோடாக் கம்பெனி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் கூட்டுறவுச்சங்க உணவகம்மீது ஷெல்விழுந்தது

### இருவர் மரணம்! இருவர் படுகாயம்!!

அச்சுவேலி, ஓக. 5
புதன்கிழமை இரவு அச்சுவேலி பஸ் நிலையப்பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர் இருவர் படுகாயம் அடைந்தனர்.

பஸ் நிலையப் பகுதியில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்க உணவகத்தின் சமையல் பகுதி மீதே ஷெல் விழுந்தது.

செல்லத்துரை தில்லைநாதன் (வயது 47) விசுவலிங்கம் கணேஸ்வரன் (வயது 47) ஆகியோரே மரணமானவர்கள் ஆவர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை தில்லைநாதன் அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி பகுதியை நோக்கி பீரங்கி - ஷெல் தாக்குதல்

### ஒருவர் காயமடைந்தார்

வல்வெட்டித்துறை, ஓக 5
வடமராட்சிப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலும், பலாலியில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

புதன்கிழமை இரவு 11.15 மணி முதல் நேற்று அதிகாலை வரை இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பீரங்கித்தாக்குதலில் காயமடைந்த அருளானந்தம் உதயராசா (29 வயது — வல்லை வீதி) மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். இப்பகுதியில் பல வீடுகளும் சேதமடைந்தன.

(இ-3-155)

## வெளியே ஓடிவந்தபோது குண்டு வீட்டின் மீது விழுந்தது

யாழ்ப்பாணம், ஓக. 5
புக்காராவின் சத்தம் கேட்டபோது அயலில் ரி. வி. யில் படம் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்குத் தகவல் கொடுக்க வெளியே ஓடி வந்தேன். அப்போது பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. குண்டு எனது வீட்டின் மீதே விழுந்தது.

புதன்கிழமை இரவு மல்லாகம் சோடாக் கம்பெனி கிழக்கு ஒழுங்கையில் இடம் பெற்ற குண்டு வீச்சின் போது மனைவியை இழந்த தம்பி தர்மராஜா (வயது 44) என்பவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு முழுதும் நேற்று கரும்புலிகளுக்கு அஞ்சலி

பலாலி விமானப்படைத் தளத்திற்குள் ஊடுருவி வெற்றிகரமான தாக்குதலை நடத்தி வீரமரணம் அடைந்த கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாக நேற்று யாழ். குடாநாடு முழுவதிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் நகரிலும், வடமராட்சி, தென்மராட்சியிலும் பிரதான வீதிகள், பொது இடங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள், தோரணங்கள் ஆகியன கட்டப்பட்டதுடன் கரும்புலிகள் பற்றிய புரட்சிப் பாடல்கள் ஒலிபெருக்கிகள் மூலம் இசைக்கப்பட்டன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

(க-17-173-117-155-31)

## கிராமசேவையாளராக 78 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ். மாவட்டத்தில் இம் மாதம் முதல் 78 பேர் கிராம சேவையாளர்களாக நியமனம் பெறுகிறார்கள்.

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை எடுத்துவந்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 99 பேர் கிராமசேவையாளர் பதவிக்கு நியமனம் பெறவிருந்தபோதும் —

தீவுப்பகுதிக்குரியவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும் —

40 வயதுக்கு மேற்பட்டவர்களின் நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

## எதிரணி பதவிக்குவந்தால் யுத்தம் முடிவுக்கு வரும்

### பொலன்னறுவைக் கூட்டத்தில் சந்திரிகா

கொழும்பு, ஓக. 5
எதிர்வரும் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும், மக்களின் ஆணைப்படி வடக்கு — கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்:

சந்திரிகா குமாரணதுங்க பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 20 ஆயிரம் மக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்குப் பிரச்சினைவாதிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதிக்கு தெரிவான 14 பேருக்கும் நிபந்தனை

யாழ்ப்பாணம், ஓக. 5
தீவுப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 14 பேருக்கும் மாகாண சபை நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது.

கிராம சேவையாளர் பதவிக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற இந்த 14 பேரும் யாழ். செயலகத்தில் கடந்த ஒரு மாதம் பயிற்சி பெற்றுவந்தனர்.

இவர்கள் தீவுப்பகுதியில் உள்ள செயலகத்தில் கடமையாற்றும் மேலதிக அரச அதிபரிடம் நேரில் சமூகமளித்து வேலையை ஏற்றால் மட்டுமே இவர்களுக்கு நியமனம் வழங்க முடியும் என்று வடக்கு-கிழக்கு மாகாணசபை நேற்று இவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் நிபந்தனை விதித்துள்ளது

(இ-3)

## வடக்கே பொருள்களை கடத்த முயன்றனராம்

### வவுனியாவில ஐவர் கைது

கொழும்பு, ஓக. 5
வவுனியாவில் தடை செய்யப்பட்ட பொருள்களை லொறி ஒன்றில் வடபகுதிக்கு ஏற்றிச் செல்ல முயன்ற இரு நபர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

4 ஆயிரத்து 700 பென்ரோர்ச் பற்றிகளும் இதில் அடங்கியிருந்தன. [illegible] ஈறற்பெரியகுளத்தில் லொறி ஒன்றுடன் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இரண்டு தன்னியக்க அன்ரெனா சிரமைப்பு சாதனங்கள், இரண்டு வானொலிக் கருவிகள், 254 இசை அறியும் கருவிகள், 534 பென்ரோர்ச்கள், போட்டோ பிரதி இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் நான்கு கொண்டென்ஸர் மைக்ரோபோன்கள் உட்பட தடைசெய்யப்பட்ட பல்வேறு பொருள்களை வடபகுதிக்கு ஏற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி டி.பிக்கு யாழ்ப்பாணம் மீது 2 நிமிட அக்கறையே!

யாழ்ப்பாணம், ஓக. 5
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு யாழ்ப்பாண மக்கள் மீது இரண்டு நிமிட நேர அக்கறை மட்டுமே உண்டாம்!

இப்போது தேர்தல் காலம். அதனால் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதால் ஏனைய பணிகளைச் செய்வதற்கு நேரமிருக்காது என்பது புரிந்து கொள்ளக் கூடியதே!

யாழ்ப்பாணத்தின் நிலைமை குறித்து தகவல்களை தெரிவிப்பதற்காக ஜனாதிபதி செயலகம் சென்ற யாழ். அரச அதிபருடன் கூட இரண்டு நிமிடங்கள் மட்டுமே ஜனாதிபதி பேசினார்!

இத்தனைக்கும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டு, அதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட பின்னரே யாழ். அரச அதிபர் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருந்தார்.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அன்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் மருதானை கூட்டத்தில் குறைவான மக்கள்

கொழும்பு, ஓக. 5
நேற்று மாலை கொழும்பு, மருதானையில் நடைபெற்ற ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தில் குறைவான மக்களே கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபேகுணசேகரா கலந்து கொண்டார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் விசுவாசியும் ஐ. தே. க. வேட்பாளருமான திரு. எம். சங்கதாஸா இக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் இந்த இடத்தில் நடைபெற்ற ஐ. தே. க. கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு வந்தனர். ஆனால் நேற்று கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, ஆளும் கட்சி மீது மக்கள் காட்டும் உதாசீனப்போக்கு வெளிவாகியதாக பி. பி. ஸி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ-6)

## ரயில்வே வேலை நிறுத்தம்

கொழும்பு, ஓக. 5
கடந்த திங்கட்கிழமை அதிகாலையில் இருந்து ரயில்வே திணைக்களத்தின் என்ஜின் பராமரிப்பு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதால் ரயில்வே சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வவுனியா, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, ரயில் சேவைகள் நடைபெறாததால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## முச்சந்தி முனி



பதவியில் அமர்ந்த பின் தான் சுயரூபம் தெரியவரும் பாருங்கோ.....!

## மாஹோவில் மா

யாழ்ப்பாணம், ஓக 5
"மாஹோ" கப்பல் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கென திருகோணமலையில் வைத்து இப்போது மாவை ஏற்றிக்கொண்டிருப்பதாக அறியவந்துள்ளது

மா — வ ஏற்றிக்கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் 188 பட்டதாரிகளுக்கு பயிற்சியாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக 5
வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் முதற் கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 188 பட்டதாரிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பயிற்சியாளர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

கொள்கை திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்படவுள்ள இவர்கள் — உள்நாட்டலுவல்கள் — மாகாணசபை அமைச்சு, கல்வி கலாசார அமைச்சு, நாடாளுமன்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மூன்று கதவு தேக்கு அலுமாரி, மூன்று கதவு முதிரை அலுமாரி, தொட்டில், கட்டில், டிரெஸிங் ரேபிள், குசன் செற்றி, சாப்பாட்டு மேசை, கதிரைகள், கோழிக்கூடு மற்றும் தளபாடங்கள். ந. ஸ்ரீதேவன், இல. 325 பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி (குறிஞ்சி மெடிக்கல் அருகில்). (32227)

## கிடாய் ஆடு விற்பனை

ஏழு மாதம் நிரம்பிய நன்கு வளர்ந்த இன்னும் வளரக் கூடிய மான்நிற கிடாய் ஆடு விற்பனைக்கு உண்டு. இல: 47, மெமோறியல் பாடசாலை ஒழுங்கை, (ஏஸ்ம் அருகில்) மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (7569)

## சேவல் குஞ்சு விற்பனை

பிறவுன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மக்கிளாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32212)

## முட்டைக்கோழி விற்பனை

காலன் பிறவுன் முட்டையிடும் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. மக்கிளாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (32211)

## காவேரி சீயாக்காய்

தரத்தின் சிகரம் காவேரி 80% சீயாக்காயும் 20% ஐந்து வகை இயற்கை பொருள்களும் சேர்த்து தயாரிக்கப்பட்டு இப்போது எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது காவேரி சீயாக்காய் பவுடர் ஏக விநியோகத்தர் நியூ வசந்தாஸ் ஸ்ரோர்ஸ், 350, பாங்ஷால் வீதி, குருநகர். (32228)

## மணமகள் தேவை

Italyயில் கம்பனி ஒன்றில் வேலை செய்கின்ற A/L படித்த தற்போது யாழ்ப்பாணத்தில் வந்துள்ளார். 5' 5'' பொது நிறமான சுவாதி II குற்றமற்ற 1960 இல் பிறந்த மணமகனுக்கு பெற்றோர் A/L படித்த அழகிய மணமகளை தேடுகின்றனர். உத்தியோகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்; வருகிற Sept.இல் திரும்புவுள்ளார். இல: 943, C/o பார்த்து உதயன். (7574)

## அடையாள அட்டை

மங்களவதனி குணரத்தினம் ஆகிய எனது 688280087V இலக்கம் கொண்ட அடையாள அட்டையும், பயிற்சி நெறிக்குரிய அடையாள அட்டையும் கிளாலிக்கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ரூபா 1000/- சன்மானம் வழங்கப்படும். கந்தன் களஞ்சியம், 322/C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (32232)

## புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுத் தரும் நிறுவனத்தால் 31-7-94 ஞாயிறு 2-8-94 செவ்வாய், 4-8-94 வியாழன் வெளியிடப்பட்ட பயிற்சி வினாத்தாள்களை (தமிழ், கணிதம்) இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32233)

## புலமைப் பரிசில் - 94

Bond கல்வி நிறுவனத்தால் 31-7-94, 02-8 94, 04-8 94, திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம்-தமிழ்) விடைகளுடன் 10/- மட்டும் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (7559)

## ஆண்டு - 4

1995ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் ஆரம்பமாகின்றன. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியில் இருந்து கற்பிக்கப்படும். ஆரம்பம் 06-08-94 சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி நாவலர் கல்விக் கழகம் ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம். (32251)

---

# யாழ். கல்வித் திணைக்களமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும்

இணைந்து நடத்தும்

## தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறிகள்

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| பயிற்சி நெறி | நடைபெறும் இடம் |
|---|---|
| 1. உடை அமைத்தல் | யா / இணுவில் மத்திய கல்லூரி |
| 2. மோட்டார் சைக்கிள் திருத்தல் | யா / இணுவில் மத்திய கல்லூரி |
| 3. பனம்பொருள் கைப்பணி | கோப்பாய் மகா வித்தியாலயம் |

தகைமைகள்:

1. குறைந்தது ஆண்டு 8 வரை கல்வி பயின்று பாடசாலையைவிட்டு நீங்கி தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்கள்.
2. வயதெல்லை 25 (ஆண், பெண் இருபாலாரும்)

விண்ணப்ப முடிவு திகதி: 12 - 08 - 1994

★ விண்ணப்பங்கள் யாவும் சுய விவரங்களுடன் உரிய பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

[சி-8829]

---

# 31ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் வல்லிபுரம் அரியம்

(கார் உரிமையாளர் - CL 8490)

ஓடி மண்ணில்: 1945 - 04 - 10

ஆறடி மண்ணில்: 1994 - 07 - 06

சிறிய வாழ்வுக்கு வழிசமைத்துச் சென்ற ஐயனே! எங்ஙனமாக மறப்பது?
காரியங்கள் பல செய்து சென்ற தங்கள் உன்னத திறத்தால்
பாரினிலேயே புகழ்ந்துரைக்கின்றாரே ஐயனே!
மின்னலாய் மறைந்து சென்றீரோ...?
வேதியடைந்தோமே.. நடைப்பிணமானோமே..
செய்வதேதும் அறிகிலோமே!

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்று 1994-08-05 காலை 10-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாருக்கு ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தித்துச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அமரர் வல்லிபுரம் அரியம் குடும்பத்தினர்.

பங்கூரன், கம்பர்மலை, வல்வெட்டித்துறை. [7573]

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 - 09 - 1922

உதிர்வு: 15 - 08 - 1993

## காசிப்பிள்ளை முத்தையா

(கோமதி ஸ்ரோர் - மன்னார்)

திதி: 05 - 08 - 1994

எங்கள் அனைவரையும் நினையாப் பிரகாரமாய் விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வமே! பேச்சொன்றும் பேசாமல் பிள்ளை முகம் பாராமல் மூச்சடங்கி விட்டனையோ! அரை நிமிடத்தில் அனைவரையும் மறந்தனையோ? உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை கண்ணீர் பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

மதவடி லேன், சிவப்பிரகாசம் வீதி யாழ்ப்பாணம். (32250)

---

# 41ஆம் நாள் நினைவலைகள்



தாயுடன் பேசும் சித்திரமாக: 03 - 08 - 1913

இறையுடன் வாழும் உத்தமனாக: 26 - 06 - 1994

ஓய்வு பெற்ற அதிபர்

## அமரர் என். சி. முருகேசு

இன்றும் உங்கள் நினைவு எம்மைச் சுற்றி நின்று
நிழலாகப் படர்ந்து எம்மில் நிறைந்து விட்டது
என்றும் எங்கள் கூட அது திரியும்போது
உங்களை நாம் எப்படித்தான் மறந்து வாழலாம்
நெஞ்சமும் உடைந்ததனால்
கண்களும் வெடித்ததனால்
நினைவுக்குள் குழிவிழுந்து செந்நீரும் கண்ணீருமே
நிறைந்தன! நிறைகின்றன உங்களை மறவோம் பப்பா

உங்கள் பாசமிகு:
மகள், மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நவாலி தெற்கு, மானிப்பாய். (32247)

---

# நல்லூர் கண்காட்சி - 1994

30-07-1994ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்படவிருக்கும் 'நல்லூர்க் கண்காட்சி - 1994' உங்களது புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய தொழில் நுட்பங்கள், முன்மாதிரியாக செய்கை பண்ணப்பட்டுள்ள பயிரினங்கள் மற்றும் கால்நடைகளை காண்பிக்க விரும்புவோர்கள் பின்வரும் விண்ணப்பப்படிவ மாதிரியினை சுயமாக தயாரித்து எதிர்வரும் 10-08-1994க்கு முன்னர் கிடைக்குமாறு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்துக்கோ, அல்லது மாவட்ட, கோட்ட, வட்ட கிராமிய உற்பத்திக்குழு அலுவலகத்துக்கோ அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

## விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:
2. விலாசம்:
3. வயது:
4. 1. கிராமிய உற்பத்திக்குழுப்பகுதி:
   2. வட்டம்:
   3. கோட்டம்:
   4. மாவட்டம்:
5. போட்டியின் வகை; (விவசாயத்துறை, விலங்கு வேளாண்மைத்துறை, கைத்தொழில்துறைகளில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிடுக)
6. நீங்கள் செய்த ........................... துறையில் எவ்வகையானவற்றை காட்சிக்கு வைக்க உள்ளீர்கள் என்பதைக் குறிப்பிடுக. உதாரணம் விவசாயத்துறையாயின் கத்தரிச்செடி எனக் குறிப்பிடவும்.
7. அதனைத் தெரிவு செய்தமைக்கான காரணம் உதாரணம் கத்தரிச்செடி ஆயின் குன்றிய பிரதேசங்களில் வளரும் பண்பு கொண்டது என்றோ கால்நடை (பசு) ஆயின் ஒரு நாளைக்கு மிகக் கூடிய பாலைத் தரக்கூடியது என்றோ குறிப்பிடுக.
8. மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் போட்டி விதிக்கு அமைய நடப்பேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

............ ............

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

இவர் எமது பகுதி கிராமிய உற்பத்திக் குழுவை வட்டத்தை / கோட்டத்தை சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

............

உறுதிப்படுத்துபவர் கையொப்பம்
கிராமிய உற்பத்திக் குழுத்தலைவர் / வட்ட கோட்ட தொடர்பாளர் / இணைப்பாளர்

திகதி:- (சி-8830)

---

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சங்கரன் மனோகரன்

தோற்றம்: 05 - 06 - 1955

மறைவு: 05 - 08 - 1984

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
அப்பா - A. சங்கரன்,
அம்மா - ச. லட்சுமி அம்மாள்,
சகோதரர், சகோதரி.

அபாக் குறுக்கு ஒழுங்கை, 87, ............ வீதி, யாழ்ப்பாணம். (சி/8656)

---

# சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா 1994

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடாத்தும் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா 06-08-1994 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு வை செந்திநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்களிற்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசில் வழங்கப்படும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அனைவரையும் விழா சிறப்புற அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

(சி / 8665)

---

கந்தர்மடம் புளியடி வீதி அருள்மிகு உதய நாகபூஷணி அம்மாள் ஆலய

# தீமிதிப்பு உற்சவம்

இன்று 05-08 1994 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் மாலை 7 மணிக்கு தீமிதிப்பு வைபவமும் விசேட கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

சமய சொற்பொழிவு:-
பிரம்ம ஸ்ரீ ம. ஜெயராமசர்மா B. A.
(ஆசிரிய ஆலோசகர்)

கொன்றை இசைக்குழுவினர் வழங்கும் இன்னிசை கானம்

மேளக்கச்சேரி:-
திருஞானசம்பந்தமூர்த்தி குழுவினர்

வில்லிசை விருந்து:-
ஈழ / நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு
("கலைமாமணி" "நவரசகலைத் தென்றல்" S S சர்மா)

இடம்:- தீர்க்கசுமங்கலி

அனைவரும் வருக! திருவருள் பெறுக!!

(32260) — தேச உபாசகர் சூரியன்

---

மாரீசன் கூடல்

# புனித கயித்தார் ஆலய வருடாந்த திருவிழா

மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தால் மாரீசன் கூடல் புனித கயித்தார் வருடாந்த திருவிழா இம்முறை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (7-8-94) காலை 6.15 மணியளவில் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் வண. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் திருநாள் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதைத்தொடர்ந்து புனிதரின் திருச் சுரூப ஆசீரும் வழங்கப்படும்.

அனைத்து ஆலய பங்கு மக்களையும் புனித கயித்தாரின் பக்தர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், நிர்வாகிகளும்

(32255)

---

# "கலையகம்" ஓவியக் கல்வி நிலையம்

அனுசரணையுடன்

# ரகுவின் ஓவியக்காட்சி - 1994

இடம்; திரு இருதயக் கல்லூரி கரவெட்டி

திகதி: 06 08 1994 சனி
07 08 1994 ஞாயிறு

நேரம், காலை 9 முதல் மாலை 4 வரை

மேற்படி காட்சி திரு. சிவசுப்பிரமணியம் (ஓவியர் ரமணி) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

★ ஆர்வலர்களை அழைக்கிறோம் ★

காட்சி அமைப்பாளர்கள்.

காட்சி சிறப்புற வாழ்த்துகிறோம்:-

## ஒளியருவி படப்பிடிப்பு நிலையம்

கோவிற்சந்தை, கரவெட்டி. (7576)

---

# வட. பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசம்

# முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருள்களும், நிறுவனமும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கு விதிக்கு அமைய பின்வரும் முறைகளை கடைப்பிடிக்கவும்.

1. உற்பத்தி நிறுவனம் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளல்.
2. நிறுவனத்தின் குறியீடு (லேபல்) பதித்தல்.
3. உற்பத்தியாகும் காலம், முடிவடையும் காலம் பதித்தல்.
4. உற்பத்திக்கு சேர்க்கப்படும் மூலப் பொருள்கள் குறியீட்டில் (லேபலில்) பதித்தல்.
5. 01-09-1994 முதல் ஒரு கிலோ உப்பின் ஆகக் கூடிய விலை ரூபாய் 10.50 சதமாக விற்றல்.
6. உற்பத்தி நிறுவனத்தின் முடிவடைந்த தேதி உடைய பொருள்கள் விற்பனைக்கு தடை.

செயலாளர்
வட. பிராந்திய
வர்த்தக சங்க சமாசம்

(சி/8664)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### துணசிங்கம் குணராஜ் (சதன்)

பலாலியில் 02-08-1994 அன்று விடுதலைப் புலிகள் நிகழ்த்திய சாதனையின் போது

**மேஜர் சேரன் (அசோக்)**

(குணசிங்கம் குணராஜ் [சதன்])

(வீரமாணிக்கதேவன் துறை, மயிலிட்டி)

அவர்கள் கரும்புலிகளுக்கு உறுதுணையாக இருந்து வீரச்சாவடைந்தார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
தும்பளை றோட்,
4 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (32259)

### வண. சகோதரர் ஏ.எம். தோமஸ் S.S.J

(ஹட்டன் புனித டொன் பொஸ்கோ கல்லூரி முன்னாள் அதிபர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புனித சூசையப்பர் துறவற சபையின் முன்னாள் அதி சிரேஷ்டருமான வண. சகோதரர் ஏ. எம். தோமஸ் S. S. J. 02 08 1994 அன்று திருகோணமலையில் காலமானார். இவரின் நல்லடக்கம் 05.08.1994 இன்று திருகோணமலை புனித மரியாள் சேமக்காலையில் இடம்பெறும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று மாலை 5.30 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
இ. மரியதாஸ்

58, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (32257)

### திருமதி. பசுபதிப்பிள்ளை புனிதவதி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது கொக்குவில் மேற்கில் வசித்தவருமான திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி 1-8-1994 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் ஏரம்பு பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், லலிதாதேவி, சர்வேஸ்வரி, சிவநேசன், லோகநாதன், பத்மநாதன், கலைவாணி, குகதாசன், சிவகுமார் ஆகியோரின் அருமைத்தாயாரும், பூபாலபிள்ளை, சண்முகரெட்ணம், சாமினா, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கைலாசபதி, மலர்மகள், செல்வச்சந்திரநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜமுகன், கயல்விழி, நர்மதா, நமசிவாயம், மயூரன், சண்முகப்பிரியா, சொரூபன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-08-1994 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஏ. பசுபதிப்பிள்ளை
(கணவர்)

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (32256)

### திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம்

வேலணை வடக்கை பிறப்பிடமாகவும், 327, நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற புற்றிடங்கொண்டார் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேதாரநாதன் (கமக இலாகா), காந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாம்பசிவம் (கருகில) இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும், வசந்தன், விமலன், சுதர்ஷினி, கிசாகன், மீரா, வாணி, உமா, ஸ்ரீசெந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
வே. சாம்பசிவம்
(மருமகன்)

327, நாவலர் வீதி,
வைமன் வீதிச் சந்தி. (32262)

---

**வடக்கே...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிச் செல்ல அவர்கள் முற்பட்டிருந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-எ)

**எதிரணி...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் ஈழம் கோரிக்கைக்குப் பதிலாக தமிழ் மக்கள் ஆத்ம கௌரவத்துடன் வாழக்கூடிய ஒன்றிணைந்த இலங்கையை தாம் தோற்றுவிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-எ-6)

**அச்சுவேலியில்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான விகவலிங்கம் கணேஸ்வரன் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

இருவரும் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் ஷெல் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விகவலிங்கம் கணேஸ்வரன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

காயம் அடைந்தவர்களில் பத்தமேனியைச் சேர்ந்த செல்வநாயகம் சதீஸ்குமார் (வயது 20) யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது வலது கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

மற்றவர் அவவெட்டியைச் சேர்ந்த அந்தோனி மரிசலின் (வயது 38) இவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் கதிரிப்பாய், வளலாய், தொண்டமானாறு கெருடாவில் பகுதிகளிலும் புதன் இரவு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(இ-4-13-15-155-17-11)

**வெளியே...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவ தினம் இரவு ஷெல் சத்தங்கள் காரணமாக நித்திரை வராமையால் அயலில் சிலர் ரீ.வி. யில் படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது புக்காரா விமானத்தின் இரைச்சல் கேட்டது. ரீ.வி. பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தகவல் கொடுப்பதற்காக வெளியே ஓடி வந்தேன். பேரிரைச்சல் கேட்ட போது 50 யார் தூரத்தில் முகம் குப்புற விழுந்து படுத்துக் கொண்டேன்.

மறுகணம் பயங்கரச் சத்தத்துடன் குண்டு வெடித்தது. திரும்பி ஓடிவந்தபோது எனது வீடு இடிந்து கிடந்தது. இடிபாடுகளுக்கிடையில் எனது மனைவி, பிள்ளைகளின் முனகல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

காயமடைந்த போதிலும் உயிருடன் இருந்த எனது மனைவியையும், பிள்ளைகளையும் உடனடியாக லாண்ட் மாஸ்டர் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்.

ஆஸ்பத்திரியில் மனைவி உயிரிழந்தார் நான்கு பிள்ளைகளில் ஒரு பிள்ளை பேர்த்தியாருடன் படுத்திருந்தால் காயம் இன்றித் தப்பிக் கொண்டது.

நானும் மற்றைய மூன்று பிள்ளைகளும் காயம் அடைந்தோம்.

இப்படி அவர் தெரிவித்தார். [இ-15]

---

## பலாலியில் வீரகாவியம்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னுவத்தளத்திற்குள் துணிகரமாகப் புகுந்து விமானப் படைத் தளத்தின் மையப் பகுதிவரை ஊடுருவிச் சென்று—

வானில் நம் மக்கள் உழைப்பதற்கும், உலாவுவதற்கும், கடலிலே தம் வாழ்க்கைத் தொழிலைச் செய்வதற்கும், பயணங்கள் மேற்கொள்வதற்கும் விடாது எம் மக்களின் வாழ்வைப் பறித்த "பெல்" ரக உலங்குவானூர்தியையும்—

நெருப்புத்தணலைக் கக்கும் உருக்கு மிருகமாம் எதிரியின் "பவள்" கவசவாகனத்தையும்—

முற்றாக அழித்து சிங்களப் படையினரில் பலரைக் கொன்றும், வீரசாதனை படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஆறு கரும்புலி மாவீரர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாகச் சென்ற இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர்களுக்கும் இன்று ஐந்தாம் திகதியில் இருந்து மூன்று நாள்களுக்குத் தமிழீழமெங்கும் வீரவணக்கம் செலுத்தி நினைவு கூரப்படவுள்ளது.

இம்மூன்று நாள்களிலும் தமிழீழத்தின் இல்லங்கள் தோறும் இம்மாவீரர்களின் உருவப் படங்கள் வைத்து, சுச்சுடரேற்றி மலர் சாத்தியும், தமிழீழத்தின் வீதிகள் தோறும் தோறணம், கறுப்பு, சிகப்பு — மஞ்சள் கொடிகள் கட்டியும் முக்கிய இடங்களில் கரும்புலிகள் பாடல்கள் இசைத்தும்—

இரண்டாம் நாளில் இம் மாவீரர்களின் உருவப் படங்கள் தாங்கிய வாகனம் கோட்ட மட்டத்தில் முக்கிய வீதிகளூடாக எடுத்து வரப்படுகையில் தமிழீழ மக்கள் தமது இல்ல வாயில்களில் குத்துவிளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செய்தும் —

இறுதி நாளாகிய 07-08-94 இல் கோட்ட மட்டத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி வீரவணக்கக் கூட்டத்திலும், பெருந்திரளாகக் கலந்துகொண்டு தமிழீழ மக்கள் அனைவரையும் தமது எழுச்சிபூர்வமான இறுதி வீரவணக்கத்தைச் செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் — என்று கூறப்பட்டுள்ளது. (ஆ-3-4)

**188 பட்டதாரி—**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அலுவல்கள் — சுற்றாடல் சூழல் பாதுகாப்பு அமைச்சு, சமநல சேவைகள் அமைச்சு ஆகியவற்றின் கீழுள்ள திணைக்களங்களுக்கு இவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு செயலகத்தில் நடக்கும் வைபவத்தில் வைத்து வழங்குவார்.

கல்வி கலாசார அமைச்சின் கீழ் நியமனம் பெறுவோர் பாடசாலைகளில் அதிபர்களுக்கு உதவியாக நிர்வாக வேலைகளை கவனிப்பர் எனவும் —

மேலும் ஒரு தொகுதி பட்டதாரிகள் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறுவர் எனவும்—தெரிவிக்கப்பட்டது.

**றுகுணு...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட 500 மெற்றிக் தொன் உரத்துடன் மட்டும் அக்கப்பலை வடக்கு நோக்கி செல்ல படையினர் அனுமதித்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

**புக்காரா குண்டு.**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு ஒழுங்கைப் பகுதியில் ஒரு வீட்டின் மீது வீசப்பட்ட குண்டினால் அந்த வீட்டில் நித்திரையில் இருந்த தர்மராசா இராசலட்சுமி (வயது 38) என்ற 5 பிள்ளைகளின் தாய் கொல்லப்பட்டார். தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகத்தில் இவர்கள் வசித்து வந்தனர்.

இறந்தவரும் அவரது மூன்று பிள்ளைகளும் இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டனர்.

மல்லாகம் சந்தி நீதிமன்ற வீதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் இருவர் காயமடைந்தனர்.

குளமன்கால் பகுதியில் வீசப்பட்ட குண்டினால் வீட்டின் வாசலில் நின்ற சவரிமுத்து ஸ்ரொடிஷியன் (வயது 20) மற்றும் எஸ். சிவபாக்கியம் (வயது 38) ஆகியோர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

சுன்னாகம் கந்தரோடை வயல் வெளியிலும் குண்டு வீசப்பட்டது.

அம்பனை தரிபிட்டான் தோட்ட வெளியில் வெடிக்காத நிலையில் ஒரு குண்டு காணப்பட்டது.

மல்லாகம் சோடாக்கம்பெனி கிழக்கு ஒழுங்கையில் இடம்பெற்ற குண்டு வீச்சில் சின்னத்தம்பி தர்மராசா (வயது 44) அவரது பிள்ளைகளான தனுஷா (வயது 8), அனிதா (வயது 4), தனுஷன் (வயது 14) ஆகியோரும் மல்லாகம்சந்தி நீதிமன்ற வீதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் ஆசீர்வாதம் பரமேஸ்வரி (வயது 33), நாகேந்திரசிங்கம் மஞ்சுளா (வயது 38) ஆகியோரும் —

குளமன்கால் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் சூசை பிரான்ஸிஸ் சேவியர் (வயது 47), இறந்தஸ்ரொடிஷியனின் சகோதரரான சவரிமுத்து ஸ்ரொக்ஷன் (வயது 23), சதாநந்தம் மேரி கொறட்டி (வயது 42) ஆகியோரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (இ-8-4-15-13-17)

**யாழ்ப்பாணம்.**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காலை ஒன்பது மணிக்கு ஜனாதிபதியைச் சந்திக்கலாம் என்று நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

அரச அதிபர் காலை 8.50 மணிக்கே செயலகத்துக்குச் சென்றுவிட்டார். ஆனால் அவரை நண்பகல் 12.45 மணியளவில் அழைத்தஜனாதிபதி, யாழ். நிலைமை குறித்து 2 நிமிடங்கள் மட்டுமே கேட்டறிந்தார்!

யாழ்ப்பாண மக்கள் மீது ஜனாதிபதிக்கு உள்ள அக்கறை அவ்வளவுதான்! யாழ்ப்பாணம் வேறு ஒரு நாடு தானே. அது குறித்து அக்கறை கொண்டு என்ன பிரதிபலன் கிடைக்கப்போகிறது என்று நினைத்தாரோ டி. பி? (ஆ-3)

**மாஹோவில்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சென்று, அங்கிருந்து சீனியையும் ஏற்றிக்கொண்டு அடுத்த வாரமளவில் அக்கப்பல் பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

"றுகுணு" கப்பலின் சோதனை முடியாத காரணத்தால் "கோமாரி" கப்பல் தொடர்ந்தும் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே தரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஆ-3)

## நவாலியில் சிசுவின் சடலம்

நவாலி தெற்கில் குருசாமி வயலுக்கு அருகில் உள்ள புங்கமேடை என்னும் இடத்தில் பிறந்து ஒரு நாளான பெண் சிசு ஒன்றின் சடலம் நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டது;

அப்பகுதியில் விறகு பொறுக்கச் சென்றவர் சிசுவின் சடலத்தை முதலில் கண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை சிசுவின் சடலத்தை சங்கானை காவல்துறையினர் ஒப்படைத்தனர்.

---

சாவகச்சேரி

### அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
### சித்திரத்தேர்த் திருவிழா

காலம்: 06-08-94 சனிக்கிழமை
முற்பகல் 10மணி

சாலை 7மணி
அபிஷேகம் விசேட பூஜை

காலை 8மணி
வசந்த மண்டபப் பூஜை

முற்பகல் 10 மணி
அம்பாள் தேரில் எழுந்தருளல்

07-08-94 ஞாயிறுக்கிழமை முற்பகல் 10 மணி
தீர்த்தத் திருவிழா

08-08-94 திங்கள் மாலை 4மணி
பூங்காவன விழா

09-08-94 செவ்வாய்
ஆடிப்பூர விழா, திருவிளக்குப் பூஜை

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

பிரமஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.

வாழ்த்துபவர்:
**சகானா**
(கோயில் அபிஷேகத்திரவியங்கள், பாடசாலை உபகரணங்கள் பெற்றுக்கொள்ளுமிடம்)
நியூமார்க்கற், சாவகச்சேரி.

[32301]

---

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிஜயா பவளம்

கொக்குவில் கிழக்கு பூநாறி மரத்தடியைச் சேர்ந்த திருமதி பவளம் தம்பிஜயா காலமாகிவிட்டார்.

இவர் தம்பிஜயா (நியூ ஸ்டார் யுவலர்ஸ், கன்னாதிட்டி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், யோகேஸ்வரி, பாஸ்கரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (கனடா), தகுலேஸ்வரி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிவிவேகானந்தராசா, தியாகநாதன் (இலங்கை வங்கி கிளிநொச்சி), அன்பரசி (ஜேர்மனி), கமதி (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், சுதாகரன் (கொழும்பு), சுதர்சினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கிரிசரன் (யாழ். இந்துக் கல்லூரி), சுகந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சஞ்செயன், ஜநேந்திரன் (கிளிநொச்சி), சங்கீத் (ஜேர்மனி) ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 5-8-94 வெள்ளிக்கிழமை நடைபெற்று மாலை 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சிறிவிவேகானந்தராசா
மருமகன்

பூநாறிமரத்தடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (32261)

---


# மிக விரைவில்....

★ தமிழோசை ★ இது எங்கள் தேசம் ★ தாயகக்கனவு
★ சின்ன விழிகள்

போன்ற வெற்றிப் படைப்புக்களைத் தந்த

பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

# இன்னும் ஒரு நாடு

(சி-8658) தயாரிப்பு: முல்லை. மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-08-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.